**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**சுய கற்றல் கையேடு - இரண்டாம் தவணை 2020**
**தரம் 11 - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல்**

## அலகு: 03 – தகவல் தேடல் மற்றும் தொடர்பாடலிற்கு இணையத்தைப் பயன்படுத்தல்.

## வினாக்கள்

## பகுதி – I

(1) சீர்மை வள இடப்படுத்திக்கு உதாரணமாக அமைவது.
1) vadazone@gmail.com 2) covid-19.docx
3) http ://www.moe.gov.lk 4) 192.168.1.1

(2) இணையத்திலுள்ள ஒவ்வொரு கணினியும் தனித்துவமான அடையாளத்தைக் கொண்டுள்ளது. அது
1) மின்னஞ்சல் முகவரி 2) ஆள்களப் பெயர் 3) URLஆகும் 4) IP முகவரி

(3) பின்வருவனவற்றில் ஆள்களப் பெயர் யாது?
1) http 2) moe.gov.lk 3) www 4) index.html

(4) பின்வருவனவற்றுள் வலிதான இணையச் செம்மை நடப்பொழுங்கு முகவரி (IP Address) எது?
1) 110.140.258.1 2) 192.168.1.1.1 3) 281.168.1.1 4) 10.20.8.8

(5) ஒரு மின்னஞ்சல் கணக்கில் தேவையற்ற மின்னஞ்சல்கள் அல்லது தெரியாத நபர்களிடம் இருந்து வரும் மின்னஞ்சல்கள் சேமிக்கப்பட்டிருக்கும் பகுதி எது?
1) Sent 2) Draft 3) Spam/Junk 4) Delete/Trash

(6) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - வலை சேவையகங்களில் சேமிக்கப்பட்டுள்ள இலத்திரனியல் ஆவணங்களின் தொகுப்பே www ஆகும்.
B - DNS சேவையகம் IP முகவரிகளின் பரிமாற்றலைக் கட்டுப்படுத்துகின்றது.
C - தரவுகளினை இரண்டு சாதனங்களுக்கிடையில் ஊடுகடத்துவதற்கு பயன்படுத்தப்படும் விதிகளே செம்மை நடப்பு ஒழுங்கு ஆகும்.
மேற்படி கூற்றுக்களில் சரியானது / சரியானவை.
1) A மாத்திரம் 2) A, B மாத்திரம் 3) A, C மாத்திரம் 4) A, B, C அனைத்தும்

(7) உலகளாவிய வலையில் (WWW) உள்ள ஒவ்வொரு வலைப்பக்கமும் கொண்டிருக்கும் தனித்துவ அடையாளங்காணி (identifier) அழைக்கப்படுவது.
1) சீர்மை வள இடப்படுத்தி (URL) 2) மின்னஞ்சல் முகவரி
3) மீ இணைப்பு (hyperlink) 4) IP முகவரி

(8) http://www.google.com எனும் சீர்மை வள இடப்படுத்தியில் மேல்மட்ட ஆள்களமாக அமைவது.
1) http 2) www 3) google 4) com

(9) இணையம் தொடர்பான செம்மை நடப்பொழுங்கிற்கு உதாரணமாக அமையாதது.
1) HTML 2) SMTP 3) TCP/IP 4) FTP

(10) தரவிறக்கம் (Download) என்பதற்கு மிகப்பொருத்தமானது,
1) சேவைப் பயநரின் கணினியிலுள்ள தகவல்களை சேவைதருநரிற்கு வழங்குதல்.
2) சேவைதருநரின் கணினியில் உள்ள தகவல்களை சேவைப் பயநருக்கு வழங்குதல்.
3) சேவைப் பயநர், சேவை தருநர் கணினிகளுக்கு இடையிலான இருவழிப் பரிமாற்றம்.
4) சேவைப் பயநர், சேவை தருநர் கணினிகளுக்கு இடையிலான தொடர்பாடல்.

(11) பின்வருவனவற்றுள் எது இணைய சேவையாக அமையாதது.
1) மின்னஞ்சல் 2) கோப்புப் பரிமாற்றம் 3) வலைமேலோடிகள் 4) கோப்புப் பகிர்வு

(12) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A – சேவையகக் கணினியில் உள்ள மென்பொருட்களை சேவைப் பயனரின் கணினிக்கு நிறுவுதல்.
B – சேவைப் பயனரின் கணினியிலுள்ள வழுக்களை நிவர்த்தி செய்தல்.
C - தரவுகளினை இரண்டு சாதனங்களுக்கிடையில் ஊடுகடத்துவதற்கு பயன்படுத்தப்படும் விதிகள் ஆகும்.
மேற்படி கூற்றுக்களில் தொலை அணுகல் மூலம் மேற்கொள்ளத்தக்க பணிகளுள் சரியானது / சரியானவை.
1) A மாத்திரம் 2) A, B மாத்திரம் 3) A, C மாத்திரம் 4) A, B, C அனைத்தும்


(13) குறித்த பயனரின் அனுமதியின்றி அவரின் கணினியில் உள்ள முக்கியமான தரவுகளையும் தகவல்களையும் வேறொரு பயனர் களவாடுதல் எவ்வாறு அழைக்கப்படும்.
1) Download 2) Upload 3) Hacking 4) Server

(14) குறித்த ஒரு கடிதத்தின் பிரதிகள் அனுப்பப்பட வேண்டிய நபர்களது மின்னஞ்சல் முகவரிகள் உள்ளிடப்படும் பகுதி.
1) To 2) Cc 3) Bcc 4) Send

(15) முகில் கணினியின் பிரதான சேவையல்லாதது.
1) அபிவிருத்திச் சூழல் சேவை 2) மென்பொருள் சேவை
3) உட்கட்டமைப்பு வசதிச் சேவை 4) வன்பொருள் சேவை

## பகுதி – II

01) கீழ்காட்டப்பட்டுள்ள சீர்மை வள இடப்படுத்தியிலுள்ள A தொடக்கம் E வரையான பகுதிகளை இனங்காண்க.




02) க துறை சார்ந்த சீர்மை இடப்படுத்திகள் நான்கினைப் பட்டியலிடுக.
03) எமது நாட்டில் இணையசேவை வழங்கும் நிறுவனங்கள் நான்கினைப் பட்டியலிடுக.
04) கீழே உள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| ஆள்களம் (Domain) | விளக்கம் |
|---|---|
| com | வாணிபம் |
| org | |
| gov | |
| edu | |
| net | |

05) A தொடக்கம் D வரை முகப்பு அடையாளமிடப்பட்டுள்ள பின்வரும் சொற்களைக் கருதுக.

A- ஆள்களப் பெயர்
B- மின்னஞ்சல்
C- தேடற் பொறி
D- வலை மேலோடி

மேலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான உதாரணங்களினை கீழ்த் தரப்பட்டுள்ள பட்டியலில் இருந்து தெரிவு செய்க.

[www.msn.com, vadazone@yahoo.com, 192.168.1.1 , gov.lk, http, chrome ]

06) கீழே உள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| சீர்மை வள இடப்படுத்தி (URL) | ஆள்களப் பெயர் | மேல்மட்ட ஆள்களம் |
|---|---|---|
| http://www.google.com | Eg:- google.com | Eg:- com |
| http://www.edupub.gov.lk | | |
| http://www.nie.lk/pages/syllabus.asp | | |
| http://www.unicode.org/consortium/consort.html | | |

07) கீழே தரப்பட்டுள்ள A தொடக்கம் D சொற்களுக்கு பொருத்தமான உதாரணங்களை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்க.

A - ஆள்கள பெயர்
B – சீர்மை வள இடப்படுத்தி (URL)
C - IP முகவரி
D - நெறிமுறை (protocol)

(SMTP, 192.168.1.1, doenets.lk, http://www.edupub.lk)

08) கீழே உள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| செம்மை நடப்பு வழக்கு (Protocol) | பயன்பாடு |
|---|---|
| HTTP | Eg:- HTML ஆவணப் பரிமாற்றம் |
| TCP/IP | |
| FTP | |
| SMTP | |
| ICMP | |

09) A தொடக்கம் F வரை முகப்படையாளமிடப்பட்டுள்ள இடைவெளிகளைக் கொண்ட பின்வரும் கூற்றுக்களைக் கருதுக. இடைவெளியை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான பதத்தை கீழே தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து இனங்காண்க. ஒவ்வொரு விடைக்கும் அவற்றின் முகப்படையாளத்தையும் பொருந்தும் பதத்தையும் எழுதுக.

A - இணையத்தில் ஆள்களப் பெயர்கள் (domain names) மற்றும் IP முகவரிகளுக்கிடையிலான ஒத்திசைவுகளை …………………. தீர்மானிக்கும்.

B - இணையத்தினூடாக ஒரு கணினியிலிருந்து இன்னொரு கணினிக்கு பெரிய கோப்புக்களை இடம் மாற்றுவதற்காக ………………… பயன்படுத்தப்படும்.

C – மின்னஞ்சல் சேவையகங்களுக்கிடையில் மின்னஞ்சல் போக்குவரத்திற்கான செம்மை நடப்பொழுங்குகளில் (Protocol) ………………… முக்கியமானதாகும்.

D – www.nie.lk என்ற ஆள்களப் பெயரின் மேல்மட்ட ஆள்களம் …………….. ஆகும்.

E – சீர்மை வள இடப்படுத்திகள் (URL) தெரியாத வலைபக்கங்களை தேடுவதற்காக …………………. ஐ பயன்படுத்த முடியும்.

F - ……………………………. மின்னஞ்சல் முகவரியொன்றின் பயனர் பெயரையும் மற்றும் ஆள்களப் பெயரையும் வேறுபடுத்தும்.

**பட்டியல்**:- [ & குறியீடு, @ குறியீடு, DNS சேவை, FTP, HTTP, ICMP, IP முகவரி, IP சேவை, lk, nie.lk, தேடல் பொறி, SMTP, URL ]


10) i) முகில் கணினி எண்ணக்கரு எனப்படுவது யாது?

ii) முகில் கணினியின் பிரதான சேவைகளைப் பட்டியலிடுக.

iii) முகில் கணினி பயன்படுத்துவதால் ஏற்படும் அனுகூலங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

iv) முகில் கணினி பயன்படுத்துவதால் ஏற்படும் பிரதிகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

**இணையச் செய்பணி நிகழும் முறை**



# விடைகள்

## பகுதி 1

| | | | |
|---|---|---|---|
| 01 | 3 | 09 | 1 |
| 02 | 4 | 10 | 2 |
| 03 | 2 | 11 | 3 |
| 04 | 4 | 12 | 2 |
| 05 | 3 | 13 | 3 |
| 06 | 3 | 14 | 2 |
| 07 | 1 | 15 | 4 |
| 08 | 4 | | |

## பகுதி – II

01) A – செம்மை நடப்பு வழக்கு
B - சேவை
C – ஆள்களப் பெயர்
D – வளம் அமைந்துள்ள இடம்
E – வளக் கோப்பு

02) http://www.doenets.lk, http://www.moe.gov.lk, http://www.edupub.gov.lk, http://www.nie.lk, http://e-thaksalawa.moe.gov.lk

03) SLT, Mobitel, Dialog, Airtel

04)

| ஆள்களம் (Domain) | விளக்கம் |
|---|---|
| com | வாணிபம் |
| org | இலாப நோக்கற்ற அமைப்பு |
| gov | அரசாங்கம் |
| edu | கல்வி |
| net | வலையமைப்பு |

05) A - gov.lk, B - vadazone@yahoo.com, C - www.msn.com, D – chrome

06)

| சீரமை வள இடப்படுத்தி (URL) | ஆள்களப் பெயர் | மேல்மட்ட ஆள்களம் |
|---|---|---|
| http://www.google.com | Eg:- google.com | Eg:- com |
| http://www.edupub.gov.lk | edupub.gov.lk | lk |
| http://www.nie.lk/pages/syllabus.asp | nie.lk | lk |
| http://www.unicode.org/consortium/ consort.html | unicode.org org | org |

07) A - doenets.lk

B – http://www.edupub.lk

C – 192.168.1.1

D - SMTP

08)

| செம்மை நடப்பு வழக்கு (Protocol) | பயன்பாடு |
|---|---|
| HTTP | Eg:- HTML ஆவணப் பரிமாற்றம் |
| TCP/IP | IP முகவரி பரிமாற்றல் கட்டுப்பாடு |
| FTP | கோப்புப் பரிமாற்றம் |
| SMTP | மின்னஞ்சல் பரிமாற்றம் |
| ICMP | வழு ஏற்படும் போது தெரிவித்தலும் செய்திக் கட்டுப்பாடும். |

09) A – DNS வேவை, B – FTP, C – SMTP, D – lk, E – தேடல் பொறி, F - @ குறியீடு

10) i) தனியாள் கணினி அடங்கலாக சகல கணினி வலையமைப்புக்கள் மற்றும் செல்லிடக் கருவிகள் அனைத்தும் இணையத்தினூடாக ஒன்றிணைக்கப்பட்டு தேவையான எந்தக் கணத்திலும் எந்தவொரு இடத்திலிருந்தும் தகவல்களைப் பெறவும் தகவல்களைச் சேமிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ள முறையே முகில் கணினி எண்ணக்கருவாகும்.

ii) உட்கட்டமைப்பு வசதிச் சேவை.
அபிவிருத்திச் சூழல் சேவை.
மென்பொருள் சேவை.

iii) பராமரிப்பு நடவடிக்கை குறைவடைதல்.
மென்பொருளுக்கான செலவு குறைவடைதல்.
செயலாற்றுவதை மேம்படுத்தல்.
மென்பொருட்களை உடனடியாக இற்றைப்படுத்த முடியும்.

iv) தொடர்ச்சியான இணையசேவை தேவைப்படல்
குறை விரைவு இணைப்பின் போது தொழிற்பாடு குறைவடைதல்.